# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## சேர்பெறுமதி வரி (திருத்தம்)

***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2024, சனவரி மாதம் 11 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, திசெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால்  அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***236 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, வழங்கப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதிசெய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதிமீது 15 சதவீதத் திலிருந்து 18 சதவீதத்துக்குச் சேர்பெறுமதி வரிவீதத்தை அதிகரிப்பதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 2024, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாகச் சேர்பெறுமதி வரிக்கான பதிவுத் தொடக்கநிலையை ஆண்டொன்றுக்கு எண்பது (80) மில்லியன் ரூபாவிலிருந்து அறுபது (60) மில்லியன் ரூபாவுக்குக் குறைப்பதாகும்.

ச. வ.- ஓ. 74/2023

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (v) ஆம் உட்பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) விடயம் (vii) இல், ''பன்னிரெண்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்) ; அத்துடன்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''பன்னிரெண்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்);'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) விடயம் (viii) இல், ''2022, ஒற்றோபர் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகவும் பதினைந்து சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்.''; என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''2022, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதும் ஆனால் 2023, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்

காகவும் பதினைந்து சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்; அத்துடன்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) விடயம் (viii) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலம் :-

"(ix) 2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதிக்காகப் பதினெட்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 9/59 ஆகும்).".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (vii) இல், "(vii) 2022, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(vii) 2022, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2023, திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) பந்தி (vii) ஐ உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(viii) 2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும்–

(அ) ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில், அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட, அத்தகைய ஆளின்

பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(ஆ) அப்போது முடிவடைகின்ற பன்னிரெண்டு மாதகாலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி அறுபது மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) அடுத்துவரும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட, அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாத காலப் பகுதியில் அறுபது மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப் படுத்தப்படுதல் வேண்டும்.''.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்